FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~குந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

C 8120357

1. District : திருச்சி மாவட்டம் PS: கொள்ளிடம் காவல்நிலையம் Year: 2025 FIR No.: 07 Date: 09.07.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended under) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : Date from : 08.07.2025 Date to : 11.00hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 09.07.2025 Time : 15.30hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : கண்ணையன் புகார் அளிக்கப்பட்டது.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கிழக்கு 13KM தொலை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : - (b) Address : உதவி மின் பொறியாளர் அலுவலகம், OSM, TANGEDCO, மணல்மேடு,
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : திருச்சி.
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. பிரவின்குமார் (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 27.04.1977 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அரசு பணியாளர் (g) Address : 2/18, தெற்கு தெரு, வாத்தலை, மணல்மேடு (PO), திருச்சி.
தொழில் (கொள்முதல் அலுவலர் கொண்டிருப்பவர்)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. அருளானந்தம், வணிக ஆய்வாளர்
உதவி மின் பொறியாளர் அலுவலகம், OSM, TANGEDCO, மணல்மேடு, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Rajeen Kumar 09/07/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.07.2025.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. இலையா ராஜ்
Rank: நிலை தலைமை காவலர் No.எண் [illegible]
உ.கு.க. எண் 21,
திருத்தி.

கனம் மாவட்ட முதன்மை நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (09.07.2025) மாலை 15.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், மணிகண்டம் அஞ்சல், செங்குறிச்சி, 2/18, தெற்கு தெரு, என்ற முகவரியில் வசித்து வரும் மூக்கன் மகன் M.பிரவின்குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மணிகண்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வணிக ஆய்வாளர் திரு.அருளானந்தம் மற்றும் புகார்தாரர் திரு.பிரவின்குமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 09.07.2025 மாலை 17.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.07/2025 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் M.பிரவின்குமார், வயது 27, த/பெ S.மூக்கன், 2/18, தெற்கு தெரு, செங்குறிச்சி, மணிகண்டம் அஞ்சல், திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு.லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரி அவர்கள் திருச்சி மாவட்டம். ஐயா, நான், மேலே கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன், ITI வரையில் படித்துள்ளேன். கடந்த ஒரு வருடகாலமாக அரசு பதிவு பெற்று ஒயரிங் காண்ட்ராக்டர் பணிகளை செய்து வருகிறேன். திருச்சி, எ.புதூர், மேட்டு தெருவில் வசித்து வரும், எனக்கு முன்பே அறிமுகமான திரு.கோவிந்தராஜ் என்பருக்கு சொந்தமான திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் தாலுகா, மேக்குடி கிராமம், வைகை நகர்–VIII என பெயரிட்டுள்ள மனை எண்.247–ல் வீடு கட்டுவதற்கு மணிகண்டம், மின்வாரியத்தில் இருந்து தற்காலிக EB கனெக்ஷன் வாங்கி தரும்படியும், மின் இணைப்பு ஒயரிங் குறித்த அனைத்து பணிகளையும் என் மூலம் செய்து தரும்படியும் கூறினார். அதன்பேரில் 13.02.2025 அன்று ஆன்லைனில் திரு.கோவிந்தராஜ் பெயரில் விண்ணப்பம் செய்தும், அன்றைய தினமே திரு.கோவிந்தராஜுவிடம் இருந்து மின் இணைப்பு குறித்த கட்டணத்தொகை ரூ5405/–ஐ பெற்று ஆன்லைனில் செலுத்தினேன். பின்னர், விண்ணப்பம் செய்த சுமார் 2 நாட்களிலேயே மணிகண்டம் மின்வாரிய அலுவலகத்தில் இருந்து CI திரு.அருளானந்தம், மேற்கண்ட கோவிந்தராஜ் அவர்களின் இடத்தினை பார்வையிட்டு அளவீடு செய்துவிட்டு சென்றார். மேற்படி விண்ணப்பம் குறித்து CI அருளானந்ததினை அவரது அலுவலகத்தில் சென்று

சந்தித்த போது, மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றால் கூடுதலாக போஸ்ட் அமைத்து மின் இணைப்பு தர வேண்டியுள்ளது என்று கூறினார். இது தொடர்பாக பலமுறை அருளானந்தத்தை சந்தித்த போது, போஸ்ட் கம்பம் வரலை, வந்தவுடனே கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின்னர், 05.07.2025 அன்று மாலை சுமார் 3 மணியளவில் மின் வாரிய அலுவலகத்தில் இருந்து வந்து திரு.கோவிந்தராஜ் இடத்தில் மின் கம்பத்தினை மட்டும் நட்டனர். பின்னர், நான், 08.07.2025 ஆம் தேதி காலை சுமார் 11 மணியளவில் மணிகண்டம் EB ஆபிஸ் சென்று CI திரு.அருளானந்ததினை சந்தித்து என்னைக்கு சார் EB கனெக்ஷன் கொடுப்பீங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நான், சீக்கிரமா கனெக்ஷன் கொடுத்திடுறேன். அதுக்கு நீங்க எனக்கு தனியா 10 ஆயிரம் ரூபாய் கோவிந்தராஜிடம் இருந்து வாங்கி கொடுங்க, அப்பதான் உங்களுக்கு EB கனெக்ஷன் தருவேன் என்று சொன்னார். நான், அதற்கு அவருக்கு வேலைதான் செஞ்சி தருகிறேன், அதுக்கான தொகைய கொடுத்திடுறார். நீங்க உங்களுக்குன்னு கேட்ட ரூபாய் 10 ஆயிரத்தை கேட்டா எப்படி சார் வாங்கி தரமுடியும் என்று கூறினேன். அதற்கு அவர், அதெல்லாம் எனக்கு தெரியாது, நீங்க கோவிந்தராஜ்கிட்டேயிருந்து 10 ஆயிரத்தை வாங்கி கொடுத்தா EB கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்வேன், இல்லைன்னா நீங்க காத்திட்டு இருக்க வேண்டியதுதான் என்று கண்டிப்புடன் கூறினார். நான், உடனே இது குறித்து மேற்படி இடத்தின் உரிமையாளர் திரு.கோவிந்தராஜுவிடம் தகவல் தெரிவித்த போது, நான், முக்கிய வேலையா வெளியூர் போக வேண்டியிருக்கு நாளை (09.07.2025) வந்துவிடுவேன் நாளை வாங்க நேரில் பேசிக்கலாம் என்று கூறினார். பின்னர், இன்று (09.07.2025) நான் கோவிந்தராஜ் அவர்களை நேரில் சந்தித்து CI அருளானந்தம் பணம் கேட்டது பற்றி கூறினேன். அதற்கு கோவிந்தராஜ் லஞ்சம் கொடுத்து எந்த வேலையும் பார்க்க வேணாம், அந்த CI அருளானந்தம் மேல லஞ்ச ஒழிப்பு போலீஸ்ல புகார் கொடுங்க என்று கூறி என்னிடம் 10 ஆயிரம் ரூபாயை கொடுத்து அனுப்பினார். எனவே, திரு.கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமான மனையில் தற்காலிக மின் இணைப்பு வழங்க என்னிடம் லஞ்சமாக ரூபாய் 10 ஆயிரம் கேட்ட மணிகண்டம் EB ஆபிஸில் பணிபுரியும் CI திரு.அருளானந்தம் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (M.Praveenkumar) 09/07/25. Sir, Submitted to the Hon'ble Principal District Judge, Tiruchirappalli. Received the report at 15.30 hrs on 09/07/25 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.07/25 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 17.00 hrs on 09.07.25. Sd.xxx (F.XAVIER RANI) 09/07/25 Inspr of Police, V&AC, Trichy.

09/07/25
(F. XAVIER RANI)
Inspr. of Police,
V&AC, Trichy.